1975 நவம்பர் 7] *[திரு. க. அன்பழகன்]*

காலத்தில் காற்றின் மூலமாகப் பரவக்கூடும். சில நோய்கள் நீர் மூலம் பரவக்கூடும். இப்படிப் பரவும் நோய் குறிப்பிட்ட காலம் வரைக்கும் பாதிக்கும்.

இரண்டாவதாக, அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாகத் தான் சிகிச்சை வழங்கப்பட்டது ; எந்ததெந்த இடங்களில் இந்த தான் சிகிச்சை வழங்கப்பட்டது ; எந்தெந்த இடங்களில் இந்த நோயினல் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வந்தார்களோ அங்கே இந்த மருந்து வழங்கும் வாய்ப்பு இருந்தது. இந்த நோயைப்பற்றி ஆய்வு முறையிலே பார்த்தபொழுது நூற்றுக்கு ஐம்பது நேர்வுகளில் மூலம் எதுவென்று சொல்ல வழியில்லை. மூலத்தைக் கண்டு பிடித்தால்தான், அந்த மூலத்தை அழிக்க, மூலத்தைத் தடுக்க முடியுமா என்பதைச் சொல்ல முடியும்.

(ஆ) மலேரியா நோய் அதிகரிப்பும், சிகிச்சை கட்டுப்பாடு முறைகள் குறித்தும்

THIRU N. K. PALANISAMY : Sir, I call the attention of the Hon. Minister for Health to a matter of urgent public importance, namely, the increase in the incidence of malaria in the State and the need to provide proper remedial and precautionary measures.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மலேரியா நோய் பரவியுள்ள இடங்களில் டி.டி.டி. (D. D. T.) மருந்து தெளித்தல், வீடுகளுக்குள் மருந்து தெளித்தல், மலேரியா நோய் கண்டுள்ளவர்களுக்கு முனைப்பான சிகிச்சையளித்தல் இவை போன்ற வழக்கமான பழைய முறைகள் இதன்முன்னர் மேற்கொள்ளப்பட்டு வந்ததைப் போலவே இப்பொழுதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலேரியா நோய் அதிகமாகப் பரவிய பின்னர் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் இந்த நடவடிக்கைகள் முனைப்பாக்கப்பட்டுள்ளன.

இப்பழைய முறைகள், கிராமப் பகுதிகளில் மலேரியா நோய் பரவுவதை முழு வகையில் தடுக்காதபடியால், கீழ்க்காணும் சிறப்புத் துணை நடவடிக்கைகள், நோய் பரவியுள்ளதன் தேவையைப் பொறுத்துத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம், இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதிகளில் மலேரியா நோய் பரவுவதைக் குறைக்க, அங்கு பழைய முறையாகிய டி.டி.டி. மருந்து தெளிப்பதோடு, கொசுப் புழுக்கள் வளரும் இடங்களில் வாரத்திற்கொருமுறை கொசுக்கொல்லி மருந்து Paris Green Dust) அடிக்கப்படுகிறது.

தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில பொன்னியாற்றுப் பகுதியில் சுமார் 50 மைல் தூரம் வாரத்திற் கொருமுறை 'அரோமெக்ஸ்' மருந்து தெளிக்கப்படுகிறது. வீடுகள் தோறும் டி.டி.டி. தெளிப்பதோடு, கொசுப்புழுக்களை அழிக்க இம்மருந்தும் தெளிக்கப்படுகின்றது. இவற்றின் விளைவுகள் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன.

மலேரியா நோய் அதிகமாகத் தாக்கியுள்ள கிராமங்களில், அந்த நோய் மேலும் அதிகமாகப் பரவுவதை உடனடியாகத் தடுக்கும்பொருட்டு, நோய் கண்டுள்ள ஏராளமான மக்களுக்கு ஒரு தடவையோ பல தடவைகளோ மருந்துகள் கொடுக்கப் படுகின்றன.

அண்மையில் தொடங்கப்பட்டுள்ள இச்சிறப்பு நடவடிக்கைகள் மூலம் விரும்பிய பலன் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. நோய் பரவுவதைத் தடுக்க இந்த நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லையென்று தெரிய வந்தால், வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில், 'புழுக்களை' அழிப்பதற்காக மருந்து தெளித்தல், வீடுகள்தோறும் டி.டி.டி. மருந்து தெளித்தல், மலேரியா நோய் பீடித்து உள்ளவர்களுக்குச் சிகிச்சை அளித்தல் முதலிய முறைகள் மேலும் முனைப்பாக்கப்பட்டுள்ளன. கொசுவின் முட்டைகளையும் புழுக்களையும் மீன்கள் உட்கொண்டு அதன்மூலம் கொசுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன. இவ்வாறு மீன்கள் வளர்க்கப்படும் குட்டைகள் வறட்சி நிலைமை காரணமாக வற்றிப் போய்விட்டன. எனவே, இப்போது கொசுக்கொல்லி மருந்து அங்கே தெளிக்கப்படுகிறது.

1975 நவம்பர் 7] [திரு. க. அன்பழகன்]

நகராட்சி நகரங்களாகிய ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் மலேரியா நோய் பரவும் வேகத்தைத் தடுக்கும் நடவடிக்கையாக கிணறுகளில் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் முறை அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்சொன்ன, மலேரியா நோய் சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு முறைகள், மலேரியா நோய் பரவுவதை விரைவில் கட்டுப்படுத்த உதவும் என்று நம்பப்படுகிறது.

கொசுத் தொல்லையை ஒழிக்க தமிழ்நாட்டில், கொசு ஒழிப்பு குறித்து சுமார் 175 திட்டங்கள் அரசினல் ஏற்பளிக்கப்பட்டு, நகராட்சிகளாலும், பேரூராட்சிகளாலும் செயற்படுத்தப் படுகின்றன. இதற்காகும் செலவில் நான்கில் ஒரு பங்கினை அல்லது மூன்றில் ஒரு பங்கினை மாநில நிதிகளிலிருந்து ரொக்க மானியமாக உள்ளாட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்கின்றன.

(முற்பகல் 10-00)

மலேரியா நோய்க் கட்டுப்பாடு குறித்தும், தடுப்பு குறித்தும் பல்வேறுவிதமான பிரச்சாரங்களும், விளம்பரங்களும் மக்கள் அறியத்தக்க வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஈரோடு, கோவை, திருச்சி ஆகிய நகர்ப்புறப் பகுதிகள், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1975 செப்டம்பர் திங்கள் மும்முர இயக்கம் நடத்தப்பட்டது. மலேரியா ஒழிப்பு வாரம் கொண் டாடப்பட்டு தமிழ்நாட்டில் தீவிரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : எவ்வளவு பணம் செலவு செய் தாலும் இந்தியாவில் அதிகமாக, சென்னை மாநிலத்தில் அதைவிட அதிகமாக இந்த மலேரியா நோய் இருக்கிறது. பாலிடின் என்ற மருந்து சின்கோனவில் இருந்து தயார் செய்யப்படுவது இப்போது கிடைப்பதில்லை. அது வெளி நாட்டிலே செய்யப்படுவதல்ல.

நம்முடைய நாட்டிலேயே சின்கோனு துறை மூலம் செய்யப்படு கிறது. அந்த பாலிடின் மருந்து பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் திட்டம் 1965-ம் ஆண்டு வரையில் 'அட்டாக் ஃபேஸ்' தீவிரப் பணியாக நடைபெற்றது. அதற்குப் பிறகு 'மெயின்டனன்ஸ் ஃபேஸ்' என்ற வகையில் தீவிரம் தாஞகவே குறைந்து விட்டது. 1965-66-ல் இருந்து 1974 வரை மலேரியா வளர்ச்சி எங்கும் காணப்படவில்லை. சென்ற ஆண்டு அந்த வளர்ச்சி காணப்பட்டது. இது பரவுவதற்கு ஒவ்வொரு இடத் திலும் ஒரு சிறப்பான காரணம் இருக்கக்கூடும். தருமபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் ஆற்ரேரப் பகுதி சதுப்பு நிலம் அதிக மாக இருக்கும் காரணத்தால் காணப்படுகிறது. வேறு சில பகுதிகள் நகரப் பகுதியாக இருக்குமானல், நல்ல குடிதண்ணீர் வசதியின்மை, குடியிருப்பு இடத்தில் நெருக்கம் இருந்தால் கொசு உற்பத்தியாகிறது. இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் மணல் வெளிப் பகுதியாக இருப்பதன் காரணமாக கொசு உற்பத்தி ஏற் படுகிறது. இடத்திற்கும், நிலைமைக்கும், தேவைக்கும் ஏற்ப கொசு ஒழிப்புப் பணி நம்மால் அணுகப்படுகிறது. அந்தப் பணி களால் பயன் ஏற்படவில்லை என்ற நிலைமை ஏற்பட்டால் வேறு திட்டங்கள் பற்றிப் பரிசீலிக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் வேறு விதமான மருந்துகள் பயன்படுத்துவது பற்றிப் பரிசிலனை செய்யப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : பாலிடின் மருந்து மார்க்கெட்டில் அதிகமாகக் கிடைக்க வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த மருந்து கிடைப்பது பற்றி அங்கத்தினர் அவர்கள் சொன்னது கவனத்தில் கொள்ளப் படும்.